# யாழ். மாவட்ட செயலகம் முன்பாக கடல் தொழிலாளர்கள் போராட்டம்!




யாழ்ப்பாணம் செப். 01

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலை எதிர்த்து யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளத்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்னால் இன்று காலை 10. 30 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் நிறைவில் கடற்தொழிலாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மனு யாழ். மாவட்ட செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 23 ஆயிரத்து 154 கடற்றொழில் புரியும் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்தக் குடும்பத்தினர் யாழ். மாவட்ட கடல் பகுதியில் தமது அன்றாட வாழ்வாதாரத்தை மேற்கொள்கின்றனர்.

2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 13 வெள்ளிக்கிழமை 01.09.2023 கதிர் 63

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## விலையை உயர்த்தாவிட்டிருந்தால் நாட்டில் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிக்கும் - அமைச்சர்

### இன்று முதல் கியூ.ஆர். முறை நீக்கமெனவும் அறிவிப்பு



எரிபொருட்களின் விலையை உயர்த்தாவிட்டிருந்தால், நாட்டில் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிக்கும் என்று எரிபொருள் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

மே, ஜ/ன் மாதங்களில் 80 - 85 அமெரிக்க டொலராக இருந்த கச்சா எண்ணெய் பீப்பாயின் விலை, ஜ"லை மாதத்தில் அதிகரித்தது. ஒகஸ்ட் மாதத்தில் 100- 110 டொலராக இது மேலும் அதிகரித்தது. இவ்வாறு சுமார் 20 வீதமளவில் கச்சா எண்ணெயின்

2 ▶

## பேருந்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்படுகின்றன

நாளை சனிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் பேருந்து கட்டணங்கள் 4 வீதத்தினால் அதிகரிக்கப்படும் என பேருந்துச் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒரு லீற்றர் டீசலின் விலை 35 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது

ஆண்டுதோறும் ஜ"லை மாதம் பேருந்துக் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

இருப்பினும், இந்த ஆண்டு எந்த மாற்றமும் செய்யப்பட்டிருக்காத நிலையில், எரிபொருள் விலையேற்றத்துடன் கட்டண அதிகரிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (04)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனுக்களை இரத்து செய்வதற்கான பணிகள் முன்னெடுப்பு!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்பு மனுக்களை இரத்து செய்வதற்கான ஆயத்தப் பணிகள் இடம்பெற்று வருவதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே அதற்கான கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

தேர்தலுக்காகச் செலவிடப்பட்ட 145 மில்லியன் ரூபாய் பணம் மீளப் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என இதன்போது தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்காகச் செலவழித்த பணத்தை மீட்க முடியாமல் உள்ளது என்றும், ஆகவே இந்த விடயம் தொடர்பாகப் பரிசீலித்து நிவாரணம் வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். (04)

## வட மாகாண தொழில் கண்காட்சி யாழ் கலாசார மையத்தில் ஆரம்பம்




2023 ஆம் ஆண்டிற்கான வட மாகாண தொழில் கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் யாழ் கலாசார மையத்தில் நடைபெற்றது.

ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நாட்டை இட்டுச்செல்லும் வகையில், கைத்தொழில் அமைச்சும் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்தக் கைத்தொழில் கண்காட்சித் தொடரின், வடமாகாண

2 ▶

## ராஜபக்சக்களை அடித்து விரட்டுங்கள் மேர்வின் சில்வா தடாலடி அறிவிப்பு!

ராஜபக்சக்கள் இனியும் அவசியமில்லை எனவும், அவர்களை விரட்டியடித்து புதிய வேலைத்திட்டங்களுக்கு போக வேண்டும் எனவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கட்சிக்குள் சில அழுகிய குப்பைகளை வைத்துக்கொண்டு காக்கைகள் சிலர் சுற்றி நின்றுகொண்டு கரைந்து கொண்டு இருக்கின்றன எனத் தெரிவித்த அவர், இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

அனைத்து கட்சிகளிலும் கீழ்த்தரமான வேலைகள் செய்யாத, உயர்ந்த, கௌரவமான நல்லவர்கள் இருக்கின்றனர் என்பதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும், மொட்டு கட்சியென கூறிக்கொண்டு நாமல் ராஜபக்சவை தலையில் சுமந்துகொண்டு போகின்றனர் எனவும் சுட்டிக்காட்டிய அவர், இனியும் ராஜபக்சக்கள் அவசியமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இவர்களை அடித்து

2 ▶

## இரவோடு இரவாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலம் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடிய கும்பல்!

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கோவில் குளம் பகுதியில் சுமார் 15 ஏக்கர் அரச காணியை சட்ட விரோதமான முறையில் இனம் தெரியாத நபர்கள் சிலர் ஜேசிபி இயந்திரங்களைப் பயன்படுத்தி துப்பரவு செய்துள்ளனர்.

நேற்று இரவு, பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அந்தப் பகுதிக்குச் சென்ற நிலையில், குறித்த நபர்கள் இயந்திரங்களை

2 ▶



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# 24 மணி நேர சேவையை ஆரம்பித்தது யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையம்



யாழ் மத்திய பேருந்து நிலையமானது இன்று முதல் 24 மணிநேர சேவையை வழுங்க ஆரம்பித்துள்ளது.

நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பேருந்து நிலையத்துக்கு வருகை தரும் நிலையில், பொது மக்களின் நலன் கருதியே இச்சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்தியத்தின் செயலாற்று முகாமையாளர் லம்பேட் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கடற்றொலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் 24 மணிநேர பேருந்து சேவையை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தோம்.

இதற்கு அமைவாக அமைச்சர், துறைசார் தரப்பினரது கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டு சென்றதன் அடிப்படையில் இந்த துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்காரணமாக, இதுவரை காலமும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுவந்த பயணிகளுக்கு தற்போது அதற்கான தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் தமது பயணங்களைப் பயணிகளால் இலகுவாகவும் தடைகளின்றியும் மேற்கொள்ள முடிகின்றது, என குறிப்பிட்டார். (04)

## இரவோடு இரவாக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைவிட்ட நிலையில் தப்பிச் சென்றுள்ளனர்.

அந்தப் பகுதியில் உள்ள அரச காணியை அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் காடுகளை அழித்து காணியை துப்புரவு செய்து கொண்டு இருப்பதாக இலுப்பைக்கடவை பொலிஸார் மற்றும் இராணுவத்தின் 541 ஆவது படைப் பிரிவுகளுக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் அவர்கள் அப்பகுதிக்குச் சென்றனர்.

இந்த நிலையில் காணியை துப்பரவு செய்ய பயன்படுத்திய 3 ஜேசிபி இயந்திரங்களை கைப்பற்றிய இலுப்பைக்கடவை காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க)

## ராஜபக்சக்களை அடித்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரட்டுங்கள் எனத் தெரிவித்ததோடு, ராஜபக்சவின் பிள்ளைகள் தாஜுதீனுக்கு செய்ததைப் போன்று என் மகனுக்கும் செய்ய முயன்றனர் எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இறுதியில் தனது மகன் அவனது திறமையால் அதில் இருந்து தப்பித்துள்ளான் என்றும், அப்பாவின் அதிகாரத்தில் அனைத்து கீழ்த்தரமான வேலைகளையும் அவர்கள் செய்துள்ளனர் எனவும் கடுமையாகச் சாடியுள்ளார்.

இவர்கள் பெருந்திருடர்கள். இவர்களை ஒதுக்கி வைத்துவிடுங்கள். கடந்த காலத்தில் தேசிய ரூபவாஹினிக்குள் என்னை ராஜபக்சக்களே அனுப்பி வைத்தனர். பின்னர் அங்கு சென்றதும் என் மீது தாக்குதல் நடத்த அவர்கள் உத்தரவிட்டதுடன், என்னையும் பதிலுக்குத் தாக்குதல் நடத்துமாறு கோரினர். இவ்வாறான ராஜபக்சக்களை விரட்டியடித்து புதிய வேலைத்திட்டங்களுக்கு போக வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ச தன்னை சின்னச் சிங்கம் என கூறிக்கொண்டு இருக்கின்றார். இவரை அப்படி கூற முடியாது. நாயென்றும்கூடக் கூற முடியாது. இவர் பயந்த கோழியே! இங்கு சிங்கம் என்பதே இல்லை. அப்பாவின் அதிகாரத்தில் இராணுவத்தையும் பொலிஸாரையும் பயன்படுத்தியே அவர்கள் செயற்பட்டனர் எனவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (க)

## வட மாகாண தொழில் கண்காட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைத்தொழில் கண்காட்சி - 2023 ஆனது செப்டம்பர் 1 முதல் 3 வரை யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் நடைபெறுகிறது.

கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தலைமையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர். (01)

## ஆசிரியர் சங்கத்தின் 66 ஆவது பேராளர் மாநாடு யாழ் நகரில்

தரமான கல்வியை உறுதி செய்து உரிமைகளை வென்றெடுப்போம் எனும் தொனிப் பொருளில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 66 ஆவது பேராளர் மாநாடு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று காலை மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்த மாநாடு, பெருமளவிலான அதிபர் ஆசிரியர்களின் பங்குபற்றலுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் மதத் தலைவர்கள் ஆசிரியர் சங்கத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட சங்கத்தின் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் எனப் பலரும் நாடுமுழுவதிலும் இருந்து வந்து கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ,

உபதலைவர் ரசிக்கா அததாங்கொட, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் அனைத்து மாவட்டங்களினைச் சேர்ந்த ஆசிரியர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது நீண்ட காலமாக ஆசிரியர் சங்கத்திலிருந்து சேவையாற்றிய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். ஆசிரியர் சங்கத்தின் பிரகடனமும் இதன்போது வெளியிடப்பட்டது. (01)

## விலையை உயர்த்தாவிட்டிருந்தால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலை உயர்ந்த காரணத்தினாலேயே எமக்கும் எரிபொருட்களின் விலையை உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

எரிபொருட்களின் விலையை உயர்த்துவது என்பது அரசாங்கம் என்ற ரீதியில் நாம் விரும்பாத ஒரு விடயமாகும். எனினும், இதனை மேற்கொள்ளாவிட்டால் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்.

எரிபொருளைத் தட்டுப்பாடின்றி, சந்தைக்கு விநியோகிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கிறது.

இதனால், எரிபொருள் சந்தைக்கு நாம் புதிய நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். அதற்கிணங்க, தற்போது சினோபெக் நிறுவனம் எரிபொருள் விநியோக நடவடிக்கையை நாட்டில் ஆரம்பித்துள்ளது.

செப்டம்பர் 25 ஆம் திகதிக்குள் நாடளாவிய ரீதியாக 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை உருவாக்க அந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேபோல், ஆர்.எம்.பொக்ஸ், செல், யுனைட்டட் நிறுவனங்களும் ஒக்டோபர் மாதமளவில் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. இவை இவ்வருட இறுதிக்குள் விநியோகத்தை ஆரம்பிக்கும். அதேநேரம், இன்று முதல் கியூ.ஆர். முறைமை இல்லாமல் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால், கலன்களிலோ போத்தல்களிலோ எரிபொருளைப் பெற்றுக் கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு நாம் பொது மக்களிடம் கேட்டுக் கொள்கிறோம், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (04)

## யாழ். மாவட்ட செயலகம் முன்பாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கடலை நம்பியே தமது குடும்ப வாழ்வை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், தற்போது இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய வருகையால் சொல்லொண்ணாத் துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கடந்த காலங்களில், இலங்கை - இந்திய மீனவர்கள் பல்வேறு கட்டப் பேச்சுகளை பல்வேறு இடங்களில் மேற்கொண்டனர். இறுதியல் அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ள.

இது தொடர்பாக பல்வேறு போராட்டங்களும் நடைபெற்றன. இவை தொடர்பாக எதுவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எனவே, இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய அடாவடித்தனமான தொழில் முறையை உடனடியாக நிறுத்தி எமது நாட்டின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளங்களை அழித்தும், சூறையாடியும், எமது மீனவர்களின் தொழில் உபகரணங்களை அழித்துச் செல்வதையும் உடனடியாக தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த இழுவை மடித் தொழிலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் நாம் தொடர் போராட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என்பதையும் தங்களுக்குத் தயவுடன் அறியத் தருகின்றோம்." - என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (03)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




மாலைக்கதிர் TV
YouTube தளம்

# சாய்ந்தமருதில் போசணை உணவுகள் அறிமுக நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் போசணைமிக்க உணவுகளைத் தயாரித்து அதனை தாய்மார்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷாத் காரியப்பர் தலைமையில் நடைபெற்றது.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்த நிகழ்வில், குறித்த அலுவலகத்தின் பொது சுகாதார மாதுக்களும் ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களும் இணைந்து சமகால பொருளாதார முகாமைத்துவத்திற்கு ஏற்ற உணவு தயாரிப்பில் ஈடுபட்டதுடன் தாய்மார்களுக்கு அது தொடர்பான விழிப்புணர்வையும் வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ. அப்துல் வாஜித், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என். எம். இப்ஹாம், பொது சுகாதார மாதுக்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதர்களும் கலந்து கொண்டிருந்தனர்





இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய பணிப்பாளர் அவர்கள் உணவு என்பது வெறுமனே பசியை தீர்க்கும் ஒன்றல்ல இது நமது சிந்தனையையும் ஆற்றலையும் தீர்மானிக்கின்ற ஒன்றாகவும் காணப்படுகிறது என்றும் இதில் எமது சிறுவர்கள் குழந்தைகளுக்கு அதிக கரிசனை காட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதுடன் உணவும் மருந்தும் நமது மண்ணில் இருந்தே உற்பத்தியாக வேண்டும் என்கின்ற பாரம்பரிய கோட்பாட்டையும் வலியுறுத்தியிருந்தார்

மேலும் ஒரு தாய் போசனையான உணவை மட்டும் ஊட்டுவதில்லை அத்துடன் அன்பையும் கருணையையும் சேர்த்தே ஊட்டுகிறாள் என்றும் எனவே இவ்வாறான உணவை தயாரிக்கும் போது மிகுந்த அக்கறையுடனும் சிறந்த உள்ளத்துடனும் விருப்பத்துடனும் அதில் ஈடுபட வேண்டும் என்றும் இது ஆரோக்கியம் மேலும் வளருவதற்கு வழிகோலும் என்றும் தெரிவித்திருந்தார்.

# இலக்கிய நாடகப் போட்டியில் கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் முதலிடம்



(வி.ரி. சகாதேவராஜா)

அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டியின் கிழக்கு மாகாண மட்ட போட்டிக்கு சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயம் இலக்கிய நாடகப் போட்டியில் முதலிடம் பெற்றுத் தெரிவாகி சாதனை படைத்துள்ளது.

மேற்படி, கல்முனை கல்வி மாவட்ட மட்ட தமிழ்த் தினப் போட்டி நேற்று வியாழக்கிழமை சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரசன்னத்தில் நடைபெற்றது.

அங்கு இடம் பெற்ற இலக்கிய நாடகம் திறந்த போட்டியில் முதலாம் இடம் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகாவித்தியாலய பாடசாலை மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

இந்த புறநானூறு இலக்கிய நாடகத்தை நெறியாள்கை செய்த நாடகம் அரங்கியல் பாட ஆசிரியர் கிளிப்டன் செலர் மற்றும் இதில் பங்கு பற்றிய மாணவச் செல்வங்களுக்கும் பாடசாலை அதிபர் சோ.இளங்கோபன் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் முதல் தடவையாக மாகாண மட்டத்திற்கு இப் பாடசாலை இலக்கிய நாடகப் போட்டியில் முதலிடம் பெற்று சாதனை படைத்தமை பலரையும் ஈர்த்துள்ளது.

பெற்றார் மற்றும் கோரக்கர் சமூகம் சார்பில் அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ். மோகன் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி தர்மபுரத்தில் அனுமதிக்கு முரணாக மணல் ஏற்றிய டிப்பர்கள்



அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இரண்டு டிப்பர் வாக-னங்கள் இராணுவத்தினரால் இன்று பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் இருந்து, அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிப் பயணித்த இரண்டு டிப்பர் வாகனங்களை, தமக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)





# பிலிப்பைன்ஸில் உள்ள துணி ஆலையில் பயங்கர தீ விபத்து

## 16 பேர் பலி மீட்பு பணி தீவிரம்

பிலிப்பைன்ஸில் உள்ள ஆடை தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தங்குமிடமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்த கட்டிடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

தீ விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு துறை மற்றும் மீட்புக்குழுவினர் விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

# குடிபோதையில் ஈபிள் கோபுரத்தின் உச்சியில் உறங்கிய அமெரிக்கர்கள்



பிரான்ஸ், பாரிஸிற்கு சுற்றுலா வந்த இரண்டு அமெரிக்கர்கள் ஈபிள் கோபுரத்தின் உச்சியின் படுத்து உறங்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஈபிள் கோபுரம் பொதுவாக காலை 9மணிக்கு சுற்றுலா பயணிகளுக்காக திறக்கப்படும். திறப்பதற்கு முன்னதாக பாதுகாவலர்கள் கோபுரத்தில் ஆய்வு மேற்கொள்வது வழக்கம். அப்போது, அமெரிக்கர்கள் இரண்டு பேர் கோபுரத்தின் உச்சியில் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். அமெரிக்க பயணிகள் இருவரும் அதிகளவில் மது அருந்தி இருந்ததால், கோபுரத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாம் நிலைகளுக்கு இடையே பொதுவாக பொதுமக்கள் அனுமதிக்கப்படாத ஒரு இடத்தில் இரவு முழுவதும் உறங்கியுள்ளனர். ஆனால், இருவரும் எந்தவொரு வெளிப்படையான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தவில்லை என்று தெரிவித்தனர்.

# சிங்கப்பூரில் இன்று அதிபர் தேர்தல் இந்திய வம்சாவளியை சேர்ந்த தர்மனுக்கு வெற்றி வாய்ப்பு



சிங்கப்பூர் அதிபர் ஹலிமா யாகூப் பின் 6 ஆண்டு பதவி காலம் வருகிற செப்டம்பர் 13-ந் தேதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து சிங்கப்பூர் அதிபர் தேர்தல் செப்டம்பர் 1-ந் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதில் மீண்டும் போட்டியிட போவதில்லை என்று தற்போதைய அதிபர் ஹலிமா யாகூப் அறிவித்துவிட்டார்.

அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்காக கேபினட் மந்திரி பதவியில் இருந்த தர்மன் சண்முக ரத்னம் தனது பதவியை ராஜினாமா செய்வதாக கடந்த ஜூன் மாதம் அறிவித்தார். இந்திய வம்சாவளியை சேர்ந்த தமிழரான தர்மன் சண்முகரத்னம், சீன வம்சாவளியை சேர்ந்தவரும் சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவருமான காச்சோங், டான்தின் லியான் ஆகியோர் அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

இவர்கள் 3 பேர் இடையே கடும் போட்டி நிலவுகிறது. அவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தனர். இதில் தர்மன் சண்முக ரத்னம் வெற்றி பெற அதிக வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இந்நிலையில் சிங்கப்பூரில் அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கியது. இதில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர்.

# சீனா வெளியிட்ட புதிய வரைபடம் அருணாச்சல பிரதேச விவகாரத்தில் 4 நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையே நீண்டகாலமாக எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது. வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான அருணாச்சல பிரதேசத்தில் அகாசி சின் என்ற பகுதி உள்ளது. இந்த பகுதியை தனது நாட்டின் ஒரு பகுதி என சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது.

மேலும் அருணாச்சல பிரதேசத்தை தெற்கு திபெத் என்றும் சீனா கூறி வருகிறது. இது தொடர்பான புதிய வரைபடத்தை சீனா கடந்த 2 நாட்களுக்கு முன்பு வெளியிட்டது. ஆனால் அருணாச்சல பிரதேச மாநிலம் முழுவதும் இந்தியாவுக்கு சொந்தம் என இந்தியா தெரிவித்துள்ளது.

சீனா வெளியிட்டுள்ள புதிய வரைபடத்தில் தைவானையும் தன் நாட்டின் ஒரு பகுதி என சீனா தெரிவித்துள்ளது. தென் சீன கடல் பகுதியில் 80 சதவீதம் சீனாவின் கட்டுப்பாட்டில் தான் இருந்து வருகிறது என சீனா சொல்லி வருகிறது. சீனாவின் இந்த நடவடிக்கைக்கு வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, தைவான் ஆகிய நாடுகள் தங்கள் கடும் கண்டனங்களை தெரிவித்து உள்ளது.

இந்த 4 நாடுகளும் அருணாச்சல பிரதேச விவகாரத்தில் இந்தியாவுக்கு ஆதரவாக உள்ளன. இந்த வரை படம் செல்லாது என வியட்நாம் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்து இருக்கிறது. பிலிப்பைன்ஸ் நாடும் நாங்கள் ஒரு போதும் சீனாவின் புதிய வரைபடத்தை ஏற்க முடியாது என தெரிவித்து உள்ளது.

# மதுக்கடை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து தென்கரைக்கோட்டையில் பெண்கள் கண்டன ஆர்ப்பாட்டம்



தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள தென்கரைக் கோட்டை பகுதியில் வரலாற்று சிறப்பு வாய்ந்த கல்யாண ராமர் கோவில், பள்ளிவாசல் மற்றும் கிறிஸ்துவ தேவாலயம் என மூன்றும் அமைந்திருக்கிறது. இந்த பகுதியில் வசிக்கும் இந்து, முஸ்லிம் மற்றும் கிறிஸ்துவ மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்த பகுதியில் அரசு மதுபான கடை அமைத்து விற்பனை செய்தால் இங்கு சகோதரத்துவத்துடன் வாழும் அனைத்து மத சமூக மக்கள் இடையே மதம் மற்றும் சாதிக்கலவரம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இதனால் மதுக் கடை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட நிர்வாகத்திற்கு கிராம மக்கள் மனு அளித்திருந்தனர்.

# கல்முனையில் தனியார் வகுப்புகளுக்கு கட்டுப்பாடுகள் விதித்துத் தீர்மானம்



(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் இடம்பெறும் தனியார் வகுப்புகளை முறையாக ஒழுங்குபடுத்துவது தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று வியாழக்கிழமை மாநகர சபை கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியின் நெறிப்படுத்தலில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை மாநகர உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் உட்பட அதிகாரிகள் பலரும் தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள், நடத்துநர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தற்காலச் சூழ்நிலையில் மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களைக் கருத்தில் கொண்டு முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலை நேரங்களில் எக்காரணம் கொண்டும் தனியார் வகுப்புகள் நடத்தப்படக்கூடாது. ஞாயிறு தினங்களில் அஹதியா மற்றும் அறநெறிப் பாடசாலை நடைபெறும் நேரத்திலும் வகுப்புகள் நடத்தப்படக் கூடாது.

தரம்-1 முதல் க.பொ.த. சாதாரண தரம் வரையான வகுப்புகள் மாலை 6 மணியுடன் முடிவுறுத்தப்பட வேண்டும்.

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வகுப்புகள் மாலை 6.30 மணியுடன் முடிவுறுத்தப்பட வேண்டும்.

இம்முறை தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான வகுப்புகளை மாத்திரம் எதிர்வரும் செப்டெம்பர்-30 ஆம் திகதி வரை இரவு 9 மணி வரை நடத்த நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் சுகாதார மற்றும் காற்றோட்டச் சூழலைக் கொண்டிருப்பதுடன், அங்கு கட்டாயம் ஆண், பெண்களுக்கென தனித் தனியான மலசல கூடங்கள் அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.

இட நெருக்கடியற்ற வகையில் போதிய தளபாட வசதிகள் இருத்தல் வேண்டும்.

மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறான விதிமுறைகளை மீறும் டியூட்டரிகளின் நடத்துனர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், கல்முனை மாநகர சபையில் பதிவு செய்யப்படாத டியூட்டரிகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதன்போது மாநகர ஆணையாளரினால் அறிவுறுத்தப்பட்டது.

அதேவேளை தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்களிடம் அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் தொடர்பாக அடுத்த கூட்டத்தில் தீர்மானிப்பதெனவும் இதன்போது முடிவு செய்யப்பட்டது.




# இராணுவ முகாமை அகற்ற வேண்டாம்! ஆனைவிழுந்தான் மக்கள் போராட்டம்



இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனக் கோரி கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான் பிரதேச மக்கள் சிலர் போராட்டம் ஒன்றை இன்று முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி நகரப் பகுதியில் அமைந்துள்ள 55 ஆவது படைப்பிரிவின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், தமது பகுதியில் உள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனக்கூறி கவன வீர்ப்பில் ஈடுபட்டனர்.

தமது பகுதியில் அனைத்து விடயங்களிலும் இராணுவம் ஒத்தாசை புரிவதாகவும், தற்பொழுது ஏற்பட்டுள்ள வறட்சியான நிலைமையிலும் தங்களுக்கான குடிநீர் விநியோகத்தினையும் இராணுவத்தினரே மேற்கொண்டு வருவதாகவும் அஅவர்கள் தெரிவித்தனர்.

தமது பகுதிகளில் நடைபெறும் எந்த ஒரு நிகழ்வாயினும் இராணுவத்தினரின் உதவியே முதலில் கிடைக்கப் பெறுவதாகவும், மரண நிகழ்வுகளில்கூட இராணுவத்தின் பங்களிப்பு மிக அதிகமாக உள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன், தமது பகுதிகளில் சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதில் இராணுவத்தினரே முன்னிற்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, அப்பகுதியில் உள்ள இராணுவ முகாமினை அகற்ற வேண்டாம் எனவும் அஅவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (க)

# தகவல் தொடர்பு தொழில்நுட்பம் தொடர்புத் திறன் செயலமர்வு






(நூருல் ஹுதா உமர்)

மனித மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில், மெற்றோ பொலிட்டன் கல்வி நிறுவனத்துடன் இணைந்து ஒழுங்கமைக்கப்பட்ட தகவல் தொடர்பு தொழிநுட்பம் மற்றும் தொடர்புத் திறன் சம்மந்தமான செயலமர்வு, மெற்றோ பொலிட்டன் கல்வி நிறுவனத்தின் கல்முனை காரியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளர் எஸ்.ஏ.முஹம்மட் அஸ்லம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக மெற்றோ பொலிட்டன் கல்வி நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் கலந்துகொண்டார்.

கல்வி நிறுவனத்தின் முகாமையாளர் எஸ்.முஹம்மட் சப்னாஸ், கடமையாற்றும் உதவி முகாமையாளர்கள் மற்றும் மனித மேம்பாட்டு அமைப்பின் பொது முகாமையாளர் டபிள்யூ.ஷவ்தப் உசைம் உட்பட பலரும் பங்கேற்றனர்.

இச்செயலமர்வில் வளவாளராக கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர்களாகக் கடமையாற்றும் எ.எம்.எம். தாரிக், எஸ்.சரிஸ்ஸா, அஹமட் ஆகியோர் கலந்துகொண்டு இளைஞர், யுவதிகளுக்கு தகவல் தொடர்பு தொழிநுட்பம் மற்றும் தொடர்புத் திறன் சம்மந்தமாக விரிவுரையாற்றினர்.





ச.தனுஷ்கா
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
ஊடகக் கற்கைகள் துறை.

# இயற்கை நியதியை மாற்றும் விஞ்ஞானம்

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இன்று பல தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவைமனிதர்களது வாழ்க்கையில் பல அபரிமிதமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. வஞ்ஞானத்தின் வளர்ச்சியால் இன்று மனிதர்களது சிக்கல் மிகுந்த வாழ்க்கையானது, சுலபமாக்கப்படுகிறது. அவ்வாறு மானுடனின் வாழ்க்கையில் பாரிய சிக்கலாக காணப்படும் குழந்தையின்மை தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வாக உலகநாடுகளில் பரவலாகவும், வெற்றிகரமாகவும் செயற்படும் தொழில்நுட்பமாக 'கருமுட்டை உறைதல்' அமைகிறது.

கருமுட்டை உறைதல் அல்லது கருமுட்டை வங்கி என்பது செயற்கைக் கருத்தரிப்பு நுட்பத்தின் ஒரு செயற்பாடாகும். இதன் மூலம் பெண்களின் கருமுட்டைகளை உறையவைத்த பின்னர் பயன்படுத்தலாம். இச்செயற்பாட்டின்போது முதிர்ந்த கருமுட்டைகள் கருப்பையிலிருந்து அகற்றப்பட்டு ஓர் ஆய்வகத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அங்கு கருமுட்டைகள் எதிர்காலப் பயன்பாட்டிற்கு ஏற்ற சரியான வெப்பநிலையில் உறைய வைக்கப்படுகின்றன. இவ்வாறு ஆய்வகத்தில் உறைய வைக்கப்படும் கருமுட்டைகளில் தேவைப்படும்பொழுது விந்தணுக்களைச் செலுத்தி,அதன்பின்னர் கருவுற்ற முட்டையைப் பெண்ணின் கருப்பையில் செலுத்தலாம்.

பல்வேறு காரணங்களுக்காக குழந்தைப் பிறப்பைப் பிற்போடும் பெண்கள் தங்கள் கருவுறுதலைப் பாதுகாக்கவும் கட்டுப்படுத்தவும் இம்முறைமையைத் தேர்ந்தெடுக்கின்றனர். பெரும்பாலும் வயதாகும்போது பெண்களது கருமுட்டையின் தரம் குறைவடைய ஆரம்பிக்கின்றது. இந்தச் சூழலில் உறையவைத்த கருமுட்டைகளைப் பயன்படுத்தி கருவுறுதலில் வெற்றியைப் பெறலாம். இதன்மூலம் கருவுறுதல் சிகிச்சையையும் தவிர்க்கலாம்.

மருத்துவத் தேவைகள், மாற்றமடையும் விருப்பங்களால் குழந்தை பெறுதலைத் தள்ளிப்போட விரும்பும் பெண்களுக்கு கருமுட்டையை உறையசெய்யும் தொழில்நுட்பம் ஒருவரப்பிரசாதமாகும். கருவுறுதல் மருத்துவத்துறையில் ஐவிஎப் க்குப் பின்னர் கருமுட்டை உறைதல் என்பது ஒரு மிகப்பெரிய தொழில்நுட்ப முன்னேற்றமாகும்.

திருமணம் ஆகாதபெண்களும் இந்தத் தொழில்நுட்பம் மூலம் தங்களின் தரமான கருமுட்டைகளை பாதுகாத்து வைத்துக் கொள்கின்றார்கள். இன்றைய போட்டி உலகில், தொழிலில் எந்தத்தடையும் இன்றிதாம் தொடர்ச்சியாகத் தொழில்புரிய விரும்பும் பெண்கள், குடும்பச் சூழல் காரணமாக குழந்தை பெறுதலை தள்ளிப்போடவிரும்பும் பெண்கள் கருமுட்டை உறைதல் செயல்முறைக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள்.

இன்றுஉலகளவில் பலபெண்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறுபுற்றுநோய் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றபெண்கள் கீமோதெரபி அல்லது ரேடியோதெரபி உள்ளிட்டசிலபுற்றுநோய் சிகிச்சைகளைமேற்கொள்வர். இப்புற்றுநோய்ச் சிகிச்சைகள் பெண்ணின் கருவுறதலைப் பாதிக்கலாம். எனவே, புற்றுநோய்ச் சிகிச்சைக்குமுன்கதாகக் கருமுட்டை உறைதல் செயல்முறையைச் செய்து எதிர்காலத்தில் உயிரியல் குழந்தைகளைப் பெறலாம்.

வயது சார்ந்த கருவுறாமைப் பிரச்சினையை பற்றிக் கவலையுறும் பெண்களுக்குக் கருமுட்டை உறைதல் ஒரு நல்ல தீர்வாக அமைகிறது. இச்செயன்முறைக்கு உகந்த வயதெல்லையாக 20 முதல் 30 வயது கூறப்படுகிறது. இந்தவயதில் ஒரு பெண்ணால் தரமான கருமுட்டைகளை உற்பத்தி செய்யமுடியும். மேலும் எப்போது தாய்மை அடையவேண்டும் என்பதை இவ்வயதெல்லையில் தீர்மானிக்கமுடியும்.

கருமுட்டை உறைதல் செயன்முறை இன்று அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் மட்டுமன்றி இந்தியாவிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருப்பினும் இந்தியாவில் மிகவும் விலையுயர்ந்த செயல்முறைகளில் ஒன்றாக இது காணப்படுகிறது. இச்சிகிச்சைக்கான செலவானது இடத்திற்கு இடம் மாறுபடும். இச்சிகிச்சையினை சாதாரணமக்களால் அணுக முடியாதென்பது இதன் குறைபாடாக உள்ளது.

இச்சிகிச்சைக்கான கட்டணங்கள் மருத்தவமனைக்கு ஏற்ப வேறுபடுகின்றன. எனவே மருத்துவமனையைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் விலைகளை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். கருமுட்டையிலிருந்து முட்டைகளை அகற்றுவது, விட்ரிபிகேக்ஷன் மூலம் முட்டைகளை உறைய வைப்பது மற்றும் திரவநைட்ரஜெனில் கருமுட்டைகளைச் சேமித்து வைப்பது உள்ளிட்ட இந்தச் செயல்முறைகளின் மதிப்பிடப்பட்ட செலவுசுமார் 1.5 இலட்சம் ரூபாயாகும் (இந்தியப் பெறுமதியில்). கருமுட்டைகளை உறையவைக்கும் இந்த செயல்முறையானது உறை நிலைநேரம், மருந்துகள், ஆய்வகச் செலவுகள், கருத்தரித்தல் மற்றும் சேமிப்புச் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

குழந்தையின்மைப் பிரச்சினைக்கு வரப்பிரசாதமாக அமையும் இச்சிகிச்சை முறையானது சாதாரண மக்களுக்கு எட்டாததாக உள்ளமையை மறுக்கமுடியாது. கருமுட்டை உறைதல் பாதுகாப்பானதா என்ற ஐயம் மக்களிடம் எழுவதுண்டு. உறைந்த கருமுட்டைகள் மூலம் கருத்தரித்த முதல் குழந்தை 1986 ஆம் ஆண்டு பிறந்தது. அதற்குப் பிறகு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் இந்தச் செயல்முறையின் லம் உலகிற்கு வந்துள்ளனர்.

உறைந்த கருமுட்டைகள் மூலம் கருத்தரித்த குழந்தைகளில், பிறவிக் குறைபாடுகளின் வீதத்தில் வெளிப்படையான அதிகரிப்பு இதுவரை காணப்படவில்லை. குழந்தைகளைப் பெறத் தயாராக இருக்கும்போது தரமான கருமுட்டைகள் கிடைக்கக்கூடிய வாய்ப்பை இக்கருமுட்டை உறைதல் செயல்முறை அளிக்கின்றது. மேலும், வயதாகும்போது கருமுட்டையின் தரம் குறையத் தொடங்குகின்றது. இந்தச் சூழலில் உறையவைத்த கருமுட்டைகளைப் பயன்படுத்தி, கருவுறுதலில் வெற்றியைப் பெறலாம்.

இன்றைய நவீன தொழிநுட்பத்தின் வளர்ச்சியால் இவ்வுலகில் மனிதர்களின் கற்பனைக்கு எட்டாத விடயங்கள் கூட மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. இதனை இன்றைய தலைமுறையில் வாழும் ஒவ்வொருத்தரும் எற்றுக் கொள்கின்றனர். அவ்வாறான ஒரு தொழிநுட்பத்தின் ஒரு உத்தியே இக்கருமுட்டை உறைதல் ஆகும். இது சாதகமான பல அம்சங்களை கொண்டிருந்தாலும் சில தீமைகள் இப்படிமுறைகளில் இருக்கத்தான் செய்கிறது. பொதுவாக கருமுட்டை உறைதலுக்காக செய்யப்படும் அறுவை சிகிச்சைகள் பாதுகாப்பானதாக கருதப்படுகிறது.

ஆனால் இந்தச் செயல்முறையின்போது செலுத்தப்படும் ஹார்மோன் ஊசிகள் கருப்பை ஹைப்பர் ஸ்டிமுலெக்ஷன் சின்ரோம் இன் அபாயத்தை அதிகரிக்கின்றது. இது பெண்களுக்கு எதிர்காலத்தில் சிலநோய்களை உண்டாக்கலாம். இதன் பக்கவிளைவுகளாக பெண்களுக்கு வாந்தி, வயிற்றுவலி அல்லது தலைசுற்றல் போன்ற பிரச்சினைகள் தொடங்குகின்றன. புல சமயங்களில் அவ்வாறு உறையவைத்து பயன்பாட்டிற்காக வெளியே எடுக்கப்படும் கருமுட்டைகள் செயற்பாட்டின் போதுவாழாது இறந்துவிடக்கூடும். இதுகுழந்தை பெறுவதற்கான வாய்ப்புக்களை குறைக்கிறது. தங்கள் கருமுட்டைகளை உறையவைக்கும் பெண்களுக்கு கருமுட்டை மூலம் கருவுறுதலுக்கான சாத்தியங்கள் பல வருடங்கள் வரை தெரிவதில்லை. இந்தச் சூழலில் இயற்கையான முறையில் குழந்தை பெறுவதற்கான வாய்ப்பையும் இழக்கநேரிடும். இவ்வாறு பல பக்க விளைவுகள் உள்ளன.

இன்று பல பிரபலங்களும் கருமுட்டைஉறைதல் முறையூடாக வெற்றிகரமாக குழந்தைகளை பெற்றுள்ளனர். 1997 ஆம் ஆண்டில் உலக அழகிப்பட்டம் வென்ற டயானா ஹைடன் 30 வயதிற்குள் தனது கருமுட்டைகளை உறைய வைத்து பாதுகாத்த முதல் இந்திய பிரபலங்களுள் ஒருவராவார். இது தவிரபாலாஜி டெலிப்பிலிம்ஸின் கிரியேட்டிவ் ஹெட் மற்றும் இயக்குனரான ஏக்தாகபூர் அவர்கள் தனது 36 வயதில் கருமுட்டைகளை உறைய வைத்ததாகவும் பின்னர் கருவுறுதலில் பலதோல்விகளை சந்தித்து வாடகை தாயின் மூலம் குழந்தை பெற்றதாகவும் ஒரு நேர்காணலில் பகிர்ந்துள்ளார்.

தென்னிந்திய சினிமாவில் முக்கியமான நடிகரான ராம்சரண் உபாசனா தம்பதிகள் திருமணம் ஆகி 10 வருடங்கள் கழித்து தமது குழந்தையைப் பெற்றனர். இவர்கள் கருமுட்டை உறைதல் சிகிச்சை மூலம் குழந்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஹாலிவூட் மற்றும் பாலிவூட் நடிப்பில் தடம் பதித்த நடிகை பிரியங்காசோப்ரா உட்பட கருமுட்டை உறைதல் முறையினூடாக தமது குழந்தைகளை பெற்றுள்ளனர். தனது 30 வயதின் முற்பகுதியில் கருமுட்டைகளை உறைய வைத்ததைப் பற்றி சமீபத்தில் போட்காஸ்ட் ஒன்றில் பகிர்ந்து கொண்டார் நடிகை பிரியங்கா சோப்ரா.

இக் கருமுட்டை உறைதல் சிகிச்சை பல மதிப்பீட்டிற்கு பிறகு ஆரம்பிக்கப்படுகிறது. இந்த நடைமுறை மூன்று பகுதிகளாக மேற்கொள்ளப்படும். முதலில் ஒரு கருப்பை தூண்டுதல் செய்யப்படும். இதில் கருப்பையை தூண்டுவதற்கும் ஒருமுட்டைக்கு பதிலாக பல முட்டைகளை உருவாக்குவதற்கும் செயற்கை ஹார்மோன்கள் பெண்ணுக்குள் செலுத்தப்படும். பின்னர் இரத்த பரிசோதனைகள் மற்றும் வெஜினல் அல்ட்ராசவுண்ட் உதவியுடன் நுண்ணறைகளின் வளர்ச்சியை (முட்டைகள் முதிர்ச்சியடையும் திரவம் நிறைந்தபைகள்) பார்க்க வேண்டும். கருப்பையின் உள்ளே நுண்ணறைகள் உருவாக சிறிதுகாலம் எடுக்கும். பின்னர் கருவுறாத முட்டைகள் மீட்டெடுக்கப்பட்டு எதிர்காலத்தில் பெண் கர்ப்பம் தரிக்கவிரும்பும் போதெல்லாம் இதை பயன்படுத்தலாம். இவ்வாறான படிமுறைகளை கடந்த பின்னரே வினைத்திறனான கருமுட்டை உறைதல் சிகிச்சையை அணுகமுடியும். முனித உடலில் காணப்படும் உயிரியல் கடிகாரத் தின் செயற்பாட்டினை இக் கருமுட்டை உறைதல் தொழில்நுட்பம் மாற்றிமைக்கிறது. தாய்மை எனும் புனிதமான நிலையை அடைவதே ஒருபெண்ணின் ஆத்மார்த்தமான சந்தோஷமாகும். அதற்கு தடையாக அமையும் காரணிகளை இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் இலகுவாக கடந்து செல்லமுடிகிறது. இயற்கை என எண்ணியதனைத்தும் இன்று செயற்கை நவீனதொழிநுட்பத்தினூடாக மாற்றிமைக்கப்படுகிறது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2023இல் வெளியிடப்பெற்றது.